Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3, No.1, 2022, (50-64)

# எழுத்துத் திறன் ஆயத்த நிலை - ஓர் ஆய்வு

## Writing Skill Readiness - A Study

**Chitra Selvi Rudrapathy**[1]
Faculty of Language and Communication, Universiti Pendidikan Sultan Idris, MALAYSIA
chittirei_81@yahoo.com

**Thulasi Rudrapathy**[2]
Faculty of Language and Communication, Universiti Pendidikan Sultan Idris, MALAYSIA
thulasi071086@yahoo.com

**Maniyarasan Muniandy**[3]
Tamil Study Department, Malaysian Teachers Education Institute, Tuanku Bainun Campus, MALAYSIA
maniyarasan.muniandy@gmail.com

**Published:** 27 June 2022

**To cite this article (APA):** Rudrapathy, C. S., Rudrapathy, T., & Muniandy, M. (2022). எழுத்துத் திறன் ஆயத்த நிலை - ஓர் ஆய்வு. *Journal of Valartamil*, *3*(1), 50-64. https://doi.org/10.37134/jvt.vol3.1.4.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.1.4.2022

**ஆய்வுச்சாரம்:** எழுத்துத் திறனின் ஆயத்த நிலையை அடையாளங்கண்டு பகுப்பாய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய முக்கியத் திறன்களில் ஒன்றாக எழுத்துத் திறன் திகழ்கிறது. ஆரம்ப பள்ளியின் கற்றல் கற்பித்தலில் 30% முதல் 60% நேரம் எழுத்துத் திறனுக்கே செலவிடப்படுகிறது. இத்திறனில் ஆளுமை பெற மாணவர்களைக் குழந்தை பருவத்திலிருந்தே தயார் செய்தல் அவசியமானது. எழுத்துத் திறன் குழந்தைகள் எழுத தொடங்குவதை அடிப்படையாகக் கொண்டது. எழுதுவது ஒரு சவாலான செயல்முறையாகும். அதற்கான ஆயத்த நிலையானது எழுதுவதற்கு முன் பயிற்சிகள், எழுதும் போது சரியான உடல்நிலை, காகிதம் வைக்கும் முறை, எழுதுகோல் பிடிக்கும் முறை போன்ற கூறுகளை உள்ளடக்கியது. இவற்றைத் தொடக்கக் கல்வியில் அமல்படுத்துவது சிறப்பு. இதில் குழந்தைகளின் தசை தேர்ச்சி, கை மற்றும் கண் ஒருங்கிணைப்பு, உடல் கட்டுப்பாடு ஆகியவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது.

***கருச்சொற்கள்:*** *எழுத்துத் திறன், குழந்தைகள், தொடக்கக் கல்வி, ஆயத்த நிலை*

**எழுத்துத் திறன் ஆயத்த நிலை - ஓர் ஆய்வு**

**Abstract:** Writing skills are one of the most basic skills of any language such as listening, speaking, reading and also writing. 30 to 60 percent of the time are spent to teach and learning process on writing skills in primary schools. It is essential to prepare the students from an early age to acquire personality in this skill. The writing skills are based on children from primary stage whereby their started to write. Writing has identified as a challenging process. The contiguous to enhance the skill such as preparedness includes actions such as writing, proper posture, paperwork, and styling, by implementing these in elementary education is special. This includes children's muscle mastery, hand and eye coordination and body control are intertwined towards to the writing skill development.

***Keywords:*** *Writing skills, children, elementary education, readiness*

## முன்னுரை

எழுத்து மொழிதான் காட்டுமிராண்டி நிலையிலிருந்த மனிதனைப் பண்படுத்தி நாகரிக நிலைக்கு உயர்த்தியது. எழுத்துக்கலை மனிதனை அறிவு நிலைக்கும் ஆன்ம நிலைக்கும் உயர்த்தியது போல வேறு எந்தச் சாதனமும் உயர்த்தவில்லை. இதனால்தான் பிளெட்டொ என்ற அறிஞர் இதனைத் தேவகலை *(Divine Art)* என்று குறிப்பிட்டுள்ளார். எழுத்துக்கலை இன்றி நம் மூதாதையரின் அறிவு களஞ்சியத்தை நம்மால் பெற்றிருக்க இயலாது. பேச்சு மொழியைக் கற்ற மனிதனுக்கு எழுதக் கற்குமாறு தூண்டியது எது என்பதை எண்ணிப்பார்த்தால் தன்னெதிரிலோ அருகிலோ இல்லாத ஒருவருக்குத் தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும். எழுத்துக்கலையின் தோற்றமானது ஓவிய எழுத்தில் தொடங்கி ஓவிய அறிகுறி எழுத்துகள், ஒலி எழுத்துகள், அலகு எழுத்துகள், தனி எழுத்துகள் என்று பலவகை நிலைகளாக வளர்ச்சியும் கண்டுள்ளது (சுப்புரெட்டியார், 1964).

எழுத்து மொழிக்கற்றலின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாக விளங்குகிறது. மற்றவை முறையே கேட்டல், பேச்சு, வாசிப்பு என்பனவாகும். ஒரு மொழியில் புலமை பெற்றவர் இந்த நான்கு அடிப்படைக் கூறுகளிலும் புலமை உடையவராக இருத்தல் வேண்டும். ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர், தாய்மொழியைத் தங்களது சூழலில் பேசுவதால் அம்மொழிக்கான பேசுதல், கேட்டல் என்கிற இரண்டு அடிப்படைக் கூறுகளுமே இயல்பாகவே அவருக்குள் அமைந்திருக்கும். ஆரம்ப பள்ளியில் தாய்மொழியைப் ஒருவர் பயிலும் போது எழுதுதல், வாசித்தல் என்கிற அடிப்படை கூறுகளை மட்டும் பயிற்றுவித்தாலே போதும் அவர் அந்த மொழியில் புலமை பெற்றவராகி விடுவார் (இரத்தினசபாபதி, 2000).

## ஆய்வு நோக்கம்

மொழியின் அடிப்படைத் திறன்கள் நான்கில், எழுத்துத் திறன் வளர்படி நிலையில் நான்காவதாகும். எழுத்துத் திறன் எழுதுதல் திறனிலிருந்து மாறுபட்டதாகும். மொழியைக் கற்கும் போது, அதிலுள்ள எழுத்துகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் முறையாக எழுதும் அளவிலேயே எழுதுதல் திறன் நிறைவடைகிறது. மொழியின் வழி கருத்துகளை வல்லமையாக வெளியிடும் திறனே எழுத்துத் திறனாகும். இது, மொழியின் உயர்நிலைத் திறனாகும். கடிதம், கட்டுரை, படைப்பு போன்றன இதில் அடங்கும் (Ahmad Muaz Muhd Hairi & others, 2020). இத்திறனைக் கைவர பெற சிந்தனைத் திறனோடு எழுதுதல் திறனும் இணைய வேண்டும். ஆக, எழுதுதல் திறனைக் கைவரப் பெற பாலர் பள்ளி முதலே குழந்தைகளுக்கு ஆயத்த நிலையிலிருந்து முறையாகக் கற்பிக்க வேண்டும் (Gerde, Bingham, & Wasik). அதற்கான தரவுகளை ஆராய்ந்து விளக்கம் அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு நூலாய்வு அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வடங்கள் ஆகியவைப் பயன்படுத்தப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் தரவுகளானது எழுத்துத் திறன், வயதுகேற்ப குழந்தைகளின் எழுதும் திறன், எழுதுகோல் பிடிப்பு, எழுதுவதற்கு முன் பயிற்சிகள், எழுதும் போது சரியான உடல்நிலை, காகிதம் வைக்கும் முறை, எழுதுகோல் பிடிக்கும் முறை ஆகிய தலைப்புகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

## எழுத்து திறன்

மொழியின் அடிப்படைத் திறன்கள் நான்கு. அவை முறையே கேட்டல், பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்து ஆகும். இவற்றில் எழுத்து இறுதி திறனாகும். ஒரு குழந்தை பிறந்தவுடன் மொழியைக் கேட்கிறது, பின் அம்மொழியைப் பேசக் கற்றுக் கொள்கிறது, தொடர்ந்து அம்மொழியை வாசிக்கக் கற்றுக் கொள்கிறது. இறுதியாக, அம்மொழியை எழுதக் கற்றுக் கொள்கிறது. எனவேதான், தொடக்கப் பள்ளிக்கான கலை திட்டத்தில் பிற திறன்களுக்கு நிகராக எழுத்துத் திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது (பழனிவேலு, 2006).

ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரிவடிவமாக அமைப்பது எழுத்தாகும். இந்த எழுத்து உருவங்களை அமைக்கப் பழகுதல் கையெழுத்து எனப்படும்.

எழுதும் பொழுது கைகளின் தசைகளும் எழுதும் கருவிகளும் கண்களும் மனதும் ஒரு சேர உழைக்க வேண்டும். ஆதலால், சிறு குழந்தைகளுக்கு எழுதக் கற்பிக்கும் முன் அவர்கள் அதற்கேற்ற பருவத்தை எய்து விட்டனரா என்று கவனித்தல் அவசியம். எழுதுகோலை விரல்களால் பிடித்து ஓர் எழுத்தின் உருவத்தை அமைக்கும் வகையில் தசைகள் இயங்க வேண்டும் (தயாளசாமி, 1962). பள்ளிகளுக்குக் குழந்தைகள் வந்து சேர்ந்தவுடன் எல்லா குழந்தைகளிடமும் எழுதுவதற்கான பருவம் வந்திருக்கக்கூடும் என்பது தவறான கணிப்பு. சிலருக்குப் பொருள்களைப் பிடித்துப் பயன்படுத்தும் திறன் விரைவில் கைவரப்பெறும். சிலருக்கு மெதுவாகத்தான் அமையும்.

## வயதுகேற்ப குழந்தைகளின் எழுதும் திறன்

ஒரு குழந்தை எழுதும் போது பல தசைநார்கள் தொடர்புள்ளதால் எழுதுவது என்பது கடினமான மற்றும் மெதுவான செயலாகக் கருதப்படுகிறது. குழந்தைகள் எழுதுவது சுத்தமாகவும் அழகாகவும் மாறுவதற்கு முன்பு அவர்களின் கைவிரல் தசைநார்களுக்குப் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நிறைய பயிற்சி தேவை. மெல்லிய விரல் இயக்கப் பயிற்சிகள் வழி குழந்தைகள் நேர்த்தியான மற்றும் சுத்தமான கோடுகள் உருவாக்க முடியும். இதைத்தான் Suraya Zaidon (2016), குழந்தைகளின் கையெழுத்துகள் சீராகவும் படிக்க எளிதாகவும் இருக்க தொடர் பயிற்சி அவசியம் என்கிறார்.





ஒரு குழந்தையால் 18 மாத வயது முதலே எழுதுகோலைப் பிடித்துத் தாளில் தோராயமாகக் கிறுக்க முடியும். இந்த வயதில் தங்களாகவே சுயமாகப் பல குறிகளை உருவாக்குவார்கள். கிறுக்கல்களும் கோடுகளை வரைவதும் குழந்தைகள் எழுதுவதன் முதல்நிலையாகும். இரண்டு முதல் மூன்று வயதில் தசைகளின் ஒருங்கிணைப்பு திறன்களின் வளர்ச்சி காரணமாகக் குழந்தைகள் கை அசைவுகளைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தவும் தாங்கள் அடையாளம் காணக்கூடிய வடிவங்களை வரையவும் முடியும். நான்கு வயதில், குழந்தைகளால் எழுதப்படும் எழுத்து, பெரும்பாலும் அலை அலையான கோடுகள் அல்லது வட்டங்கள் போல் இருக்கும். அவர்களுக்கு ஐந்து வயதாகும் போது எழுத்துகள் உண்மையான எழுத்துகளாக இருக்கும். அட்டவணை 1 வயது அடிப்படையில் குழந்தைகளின் எழுத்து வளர்ச்சியையும் அட்டவணை 2 எழுதுகோல் பிடிப்பையும் காட்டுகிறது (மலேசிய சுகாதார அமைச்சு, 2022).

அட்டவணை 1: வயது அடிப்படையில் குழந்தைகளின் எழுத்து வளர்ச்சி

| வயது | குழந்தைகளின் எழுத்து வளர்ச்சி |
|---|---|
| 10 முதல் 12 மாதம் | காகிதத்தில் கிறுக்குதல். |
| 2 வயது | காகிதத்தில் நேர்கோடு, படுக்கைக்கோடு, வட்டம் ஆகியவற்றைப் பார்த்து வரைதல். |
| 3 வயது | காகிதத்தில் நேர்கோடு, படுக்கைக்கோடு, வட்டம் ஆகியவற்றை எழுத முனைதல். |
| 4 வயது | சதுரம் வரைதல், '+', 'x', '¥', '/', சில எழுத்துகள், எண்கள் மற்றும் தன் பெயரை எழுத முயற்சித்தல். |
| 5 முதல் 6 வயது | முக்கோணம் வரைதல், தன் பெயரையும் பெரும்பாலான எழுத்துகளை அடையாளங்கண்டு எழுதுதல். |

மூலம்: மலேசிய சுகாதார அமைச்சு (2022)

அட்டவணை 2: எழுதுகோல் பிடிப்பு

| *Palmar Supinate* | *Distal Pronate* | *Static Tripod* | *Dynamic Tripod* |
|---|---|---|---|
|  |  |  |  |
| 12 முதல் 18மாதம் | 24 முதல் 36மாதம் | 3 முதல் 4வயது | 5 முதல் 6வயது |

மூலம்: மலேசிய சுகாதார அமைச்சு (2022)

## முன் பயிற்சிகள்

எலன் மற்றும் ஜெனிபர் (2021), குழந்தைகள் கல்வியில் வெற்றிகரமாகப் பங்கேற்க சிறந்த மோட்டார் செயல்திறன் பயிற்சிகள் அவசியம் என்கின்றனர். தற்போதைய காலகட்டத்தில் பாலர் பள்ளிப் பாடத்திட்டங்கள், மோட்டார் செயல்திறன் அடிப்படையிலான கற்றலில் குறைந்த முக்கியத்துவம்

அளிக்கிறது. குறிப்பாக எழுத்துத் திறனில் அதன் பங்களிப்புக் குறைவாகவே உள்ளது.

பாலர் வகுப்புகளில் குழந்தைகளுக்கு முதன் முதலில் எழுதக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எழுதக் கற்றுக் கொடுக்கும் முன்னர், எழுதுதல் திறன் முறையாக வளர குழந்தைகளுக்கு முன் செயல்கள் வழங்கப்பட வேண்டும். ஏனெனில், எழுதும் போது கைகளின் தசைகளும் எழுது கருவிகளும் கண்களும் மனமும் ஒரு சேர இயங்கினால்தான் அவர்களால் நல்ல கையெழுத்தை உருவாக்க முடியும் (இரத்தினசபாபதி, 2000). எழுதுவதற்கு முன்பு எழுதப் பயன்படும் உறுப்புகளாகிய கை, முன்கை, மணிக்கட்டு, விரல்கள், தசைநார்கள் ஆகியவறைப் பழக்கப்படுத்துவதற்காகக் குழந்தைகளுக்குச் புலன் தொடர்பான பயிற்சிகள் அவசியமானது.

## விரலசைவு பழக்கம்

எழுதலுக்குரிய உடலுறுப்புகள் விரல்கள் ஆகும். குழந்தைகளுடைய மென்மையான விரல்கள் 4 வயதுவரை எழுதும் ஆற்றலுடையவையல்ல. பின்னாளில் எழுதுகோலைப் பிடித்து எழுதும் திறன் பெற, விரல்கள் நன்றாக அசைந்து, எழுதுகோலைப் பற்றிப் பிடிக்கும் வலிமை பெற வேண்டும். விரல்கள் வலிமை பெற பல்வேறு பழகு செயல்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றுள் பாலர் வகுப்புகளில் வழங்கத்தக்கனவற்றுள் குறிப்பிடத்தக்கன இரண்டு. அவையானது கட்டைகளை அடுக்குதல் மற்றும் மணிகளை அடுக்குதல் ஆகும் (இரத்தினசபாபதி, 2000).

## கட்டைகளை அடுக்குதல்

எழுதுதல் ஒரு செயல் திறன். அச்செயல்திறனைக் குழந்தைகள் பெறுவதற்கு வழங்கப்படும் முன்செயல்களுள் ஒன்று, குழந்தைகளைக் கட்டைகள் அடுக்கச் செய்வதாகும். இன்றைய நவீன காலத்தில் இவ்வாறான பயிற்சிகள் குழந்தைகளுக்கு இல்லாமலே போகிறது. கட்டைகளை அடுக்கும் பருவத்தில் நவீனக் கைப்பேசிகள் குழந்தைகளின் கைகளில் தவழ்ந்து வருகிறது. இதனால், அவர்களின் விரல் பிடியின் வலிமை, கைதிறன் மற்றும் எழுதுகோல் பிடி முறை போன்ற கைச்செயல் திறன்கள் கணிசமாகப் பாதிக்கப்படுகின்றன (Maulik, Sweety, & Vaibhav, 2022). வண்ணக்கட்டைகளைக் குறிப்பிட்ட வடிவமைப்பில் அடுக்கும் போது, குழந்தைகள் ஆர்வமாக அச்செயலில் ஈடுபடுவர். கட்டைகளை

அடுக்கும் போது கை விரல்களுக்கு அசைவுப் பழக்கம் ஏற்பட்டு விரல்களும் வலிமை பெறுகின்றன.

## மணிகளை அடுக்குதல்

பாலர் வகுப்புகளில் பல ஆண்டுகளுக்கு முன், புளியங்கொட்டைகளை அடுக்குதல், எழுதுப் பழக்க முன் செயல்களாகக் கொடுக்கப்பட்டன. தரையில் அல்லது பலகையில் எழுத்துகளை உரிய வடிவத்தில் ஆசிரியர் எழுதி தர, எழுத்தின் மேல் புளியங்கொட்டைகளை அடுக்கினர். நகர்ப்புறப் பள்ளிகளில் இதே பயிற்சிக்காக மணிகளைப் பயன்படுத்தினர் (இரத்தினசபாபதி, 2000). இதே பயிற்சிகள் வீட்டிலும் கொடுக்கப்பட்டது.

ஆனால், இன்று பெரும்பாலான வீடுகளில் குழந்தைகளுக்கு நவீன கைப்பேசிகளைக் கொடுத்து ஒரே இடத்தில் முடக்கும் வழக்கம் வந்துவிட்டது. கைப்பேசியின் திரையுடன் மணிக்கட்டு, கைகள், விரல்கள் அதிகமாகச் செயல்படும்போது, கைகளில் இரத்த ஓட்டத்தைக் குறைப்பதோடு தசைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கப்படுவதையும் தவிர்க்கும். இதனால் கைகளில் வலி, தசை சோர்வு ஏற்பட்டு கைகளின் செயல்திறன்கள் பலவீனம் அடைகின்றன (Maulik and others, 2022). தற்போது பலவித வண்ணங்கள் மற்றும் வடிவங்களில் மணிகள் சந்தையில் விற்கப்படுகின்றன. மணிகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்துத் தகுந்த பயிற்சி அளித்தால் அவர்கள் மகிழ்வோடு இதில் ஈடுபடுவதோடு அவர்களின் கைகள், தசை, மணிக்கட்டு, விரல்கள் ஆகியவற்றிற்குச் சிறந்த பயிற்சியாகவும் அமையும்.

## வரைவுப் பழக்கம்

விரலசைவுகள் செம்மைப்பட்ட பின்னர், குழந்தைகளுக்கு எழுதுகோலை வழங்க வேண்டும் (Yigit-Gencten, & Jones, 2021). தொடக்க நிலை எழுதுகோல், பல்பம் அல்லது குச்சியாக இருத்தல் வேண்டும். பின்னர், பென்சில் பயன்படுத்தப்படலாம். அதன் பின்னரே பேனா பயன்படுத்தப்பட வேண்டும். வண்ணங்கள் தீட்ட வண்ணப் பென்சில்களைப் பயன்படுத்தலாம். கோழிமுட்டை, யானை உருவங்களை வண்ண பென்சில்களால் படம் வரைந்து வண்ணம் தீட்டச் செய்யலாம். குச்சி, பென்சில் போன்றவற்றைத் தொடக்க காலத்தில் குழந்தைகளுக்கு வழங்கி எழுத்துத் திறன் வளர்க்கும் முன் செயல்களாக வரைவுகளை எழுதப் பழக்க வேண்டும்.

## காகிதம் மடித்தல் மற்றும் காகிதம் வெட்டுதல்

Suraya Zaidon (2016), காகிதத்தை மடிப்பதும் மற்றும் காகிதத்தை வெட்டுவதும் குழந்தைகளின் கைகளுக்குப் பயிற்சி அளிக்க ஒரு சிறந்த வழி என்கிறார். மேலும், காகிதம் வெட்ட கத்தரிக்கோல் பயன்படுத்தும் போது குழந்தைகளின் கைவிரல் மற்றும் கண் செயல்பாடு ஒருங்கிணைந்து மேம்படும் என்கிறார். சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்புக் கருதி அவர்களிடத்தில் கத்தரிக்கோல் கொடுப்பதில்லை. தொடர்ந்து அவர், குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப பல வகையான கத்தரிக்கோல்களை அவர்களுக்குக் கொடுத்துக் காகிதத்தை வெட்ட செய்யலாம் என்கிறார். கத்தரிக்கோல் பயன்படுத்திக் காகிதத்தை வெட்டும் திறனானது எழுத்துத் திறனுக்கும் பிற விரல் தசை வளர்ச்சி திறன்களுக்கும் பேருதவியாக இருக்கும் (Mohd Sharif, Che Azid, & Wan Kharuddin, 2021).

அட்டவணை 3: குழந்தைகளின் வயதிற்கு ஏற்ற கத்தரிக்கோலும் அதன் பண்புகளும்

| வயது | கத்தரிக்கோல் வகை | கத்தரிக்கோலின் பண்புகள் |
|---|---|---|
| 0 முதல் 2வயது |  | அளவில் சிறியது<br>எடை குறைவு<br>காகிதத்தை மட்டும் வெட்டும்<br>நெகிழியால் செய்யப்பட்டது<br>கூர்மையற்ற முனை |
| 2 முதல் 4வயது |  | அளவில் சிறியது / நடுத்தரமானது<br>எடை குறைவு<br>காகிதத்தை மட்டும் வெட்டும்<br>நெகிழி/ இரும்பால் செய்யப்பட்டது<br>கூர்மையற்ற முனை |
| 4 முதல் 6வயது |  | அளவில் நடுத்தரமானது / பெரியது<br>எடை குறைவு<br>காகிதம் / துணி வெட்டுவதற்கு ஏற்றது<br>இரும்பால் செய்யப்பட்டது<br>கூர்மையற்ற முனை |

மூலம்: சுராயா ஜைடன் (2016)

## வீட்டில் மனமகிழ்வு நடவடிக்கைகள்

குழந்தைகளுக்கு வீட்டில் பல விதமான மனமகிழ்வு நடவடிக்கைகளாக மெல்லிய மற்றும் கடினமான விரல் தசை பயிற்சிகள் வழங்குவது, அவர்களிடத்தில் அடிப்படை எழுதும் திறனையும் அறிவாற்றல் திறனையும் மேம்படுத்த உதவும். (Mohd Sharif and others, 2021). குழந்தைகளின் வயதிற்கேற்ப தசை பயிற்சிகள் வழங்குவதைப் பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும். முறையான தசை பயிற்சிகள் குழந்தைகளின் எழுத்துத் திறனைத் தவிர அவர்களின் அன்றாட கடமைகளை முறையாக முடிக்கும் திறனையும் வளர்க்க உதவும். களிமண்ணில் சின்னச்சின்ன உருவங்கள் செய்ய பழகுதல், குழந்தைகளின் கைகள், தசைகள், கண்கள் என்று ஒரே நேரத்தில் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களின் மனமும் ஒருங்கிணைந்து செயல்படும். வீட்டில் இருக்கும் அரிசி மாவு, கோதுமை மாவு இப்படி ஏதேனும் ஒரு மாவினை அகலமான பாத்திரத்தில் கொட்டி குழந்தைகள் அதனை நன்கு பிசையலாம். இதனால் அவர்களின் கைவிரல்களுக்கு நெகிழ்வுத்தன்மை கிடைக்கும். சில்லறைக் காசுகளை எண்ணி, அவற்றைச் சிறு துளையுள்ள உண்டியலில் போடச் சொல்லலாம். பல்லாங்குழி போன்ற நம் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடச் செய்யலாம். இதனால், கையில் உள்ள நரம்புகள் வலுப்படும். பென்சிலை வழுக்காமல் அவர்களால் பிடித்து எழுத விரல்கள் பழக்கப்படும். காகிதங்களைக் கிழித்து பந்துகள் போல் உருட்டி விளையாடலாம். இதனால் மொத்த கை நரம்புகளும் வலுப்படும் (Growing Hands-On Kids, 2021). மேலும் Clay (2010), கருத்துபடி உல்லன் நூலைக் கொடுத்து அதில் மணிகள், சிறு பாசிகள் போன்றவற்றைக் கோர்க்கச் சொல்லலாம். கெட்டியான அட்டையில் சிறுதுளைகள் போட்டு அதில் நூலைக் கோக்கச் சொல்வதாலும் கை நரம்புகளை வலுப்படுத்தலாம்.






## சொரசொரப்புத் தளத்தில் எழுதுதல்

இரத்தினசபாபதி (2000), வரைவுகளை எழுதும் முன்னர், தொடு உணர்வை வலுப்படுத்தத் தேவையான பழகு செயல்களை வழங்குதல் நன்று என்கிறார். முற்காலத்தில் மணல் பரப்பில் எழுதக் கற்பிக்கும் முறை இருந்தது. இம்முறை தற்போது முழுமையாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. சில பள்ளிகளில் மணல் பரப்பிற்குப் பதிலாக உப்புத்தாள் பயன்படுத்தப்படுகிறது. சொர சொரப்பான தளங்களில் குழந்தைகள் விரலால் எழுதிப் பழகினால், தொடு உணர்வு வழி எழுத்துகளின் வடிவங்கள் செம்மையாகப் பதியும். எழுதுகோல் பிடித்துப் பின்னாளில் எழுதுவதற்கு இச்செயல் வலுவூட்டம் தரும்.

## கோடுகளை எழுதுதல்

தமிழ் எழுத்துகள் நான்கு வகையான கோடுகளைக் கொண்டது. அவை நெடுக்கைக் கோடுகள், படுக்கைக் கோடுகள், வளைவுகள், சுழிகள் ஆகும். இரத்தினசபாபதி (2000), இக்கோடுகளை வலமிருந்து இடம், இடமிருந்து வலம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், வலஞ்சுழியாகவும், இடஞ்சுழியாகவும் எழுதுவிக்க வேண்டும். குழந்தைகள் கோடுகளை நன்கு எழுதிப் பழகிய பின், எழுத்துகளை எழுதக் கற்றுத்தர வேண்டும் என்கிறார்.


அட்டவணை 4: கோடுகள் எழுதும் பயிற்சி

| கோடுகள் எழுதும் பயிற்சி | உதாரணம் |
|---|---|
| வலமிருந்து இடம் |  |
| இடமிருந்து வலம் |  |
| மேலிருந்து கீழ் |  |
| கீழிருந்து மேல் |  |
| வலஞ்சுழி |  |
| இடஞ்சுழி |  |

மூலம்: இரத்தினசபாபதி (2000)

## எழுதும் போது சரியான உடல்நிலை

அன்னான்டாலே (2019), பிள்ளைகள் அமரக்கூடிய நாற்காலியும் மேசையும் அவர்களின் வயது மற்றும் உயரத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் வசதியாக அமர்ந்து எழுத முடியும். இல்லையில் அவர்களின் கையெழுத்தின் தரம் பாதிக்கப்படும் என்கிறார். பிள்ளைகள் எழுதும் போது உடலைக் கோணலாகச் சாய்த்துக் கொண்டு உட்காரக் கூடாது. இவ்விதப் பழக்கம் ஆரம்பத்திலேயே திருத்தப்படாவிடில் பிள்ளைகளின் உடலில் நிரந்தரமான விகார அமைப்பு ஏற்படும். ஆதலால், மாணவர்கள் நேராக உட்கார வேண்டும். அவர்கள் உட்காருவது அவர்களுக்குச் சுகமாக இருக்க வேண்டும். முன்புறமாக அதிகம் சாயக்கூடாது. (தயாளசாமி, 1962).




(மூலம்: Teach Handwriting, (2021)

படம் 1: எழுதும் போது சரியான உடல்நிலை

## காகிதம் வைக்கும் முறை

வலது கை எழுத பழக்கம் உள்ளவர்களுக்குக் காகிதம் இடது பக்கம் ஏறக்குறைய 45° பாகை அளவில் சாந்திருக்க வேண்டும். எழுதும் கை காகிதத்திலும் இடது கை காகிதத்தின் மேல் இடது மூலையில் இருத்தல் வேண்டும். இடது கை எழுத பழக்கம் உள்ளவர்களுக்குக் காகிதம் வலது பக்கம் ஏறக்குறைய 45° பாகை அளவில் சாந்திருக்க வேண்டும். எழுதும் கை காகிதத்திலும் வலது கை காகித்தின் மேல் வலது மூலையில் இருத்தல் வேண்டும் (Annandale, 2019).



(மூலம்: Teach Handwriting, (2021)


படம் 2: எழுதும் போது காகிதம் வைக்கும் முறை

## எழுதுகோல் பிடிக்கும் முறை

குழந்தைகள் எழுதுகோலைப் பிடித்து எழுதும் விதம் எழுத்தின் தரத்தைக் காட்டும். வசதியாக எழுதுகோல் பிடிக்கும் முறையில் ஐந்து விரல்களும் அடங்கும். ஒவ்வொரு விரலுக்கும் அதன் சொந்த செயல்பாடு உள்ளது (Siti Sakinah Jalil, 2013). பொதுவாக எழுதுக்கூரிலிருந்து 3 முதல் 4 செ.மீ தூரத்தில் எழுதுகோலின் மேற்பக்கத்தில் சுட்டு விரல் தரித்து, எழுதுகோலின் கீழ்பக்கத்தில் தொடும் விரல்களிலிருந்து நடுவிரல் மறைந்து, எழுதுகோலின் முன்பக்கத்தில் பெருவிரல் சுட்டுவிரலைத் தொடுமாறு மொத்தம் ஐந்து விரல்களால் எழுதுகோலைப் பிடித்தல் வேண்டும் (Annandale, 2019). எழுதுகோலைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளலாகாது; மிக அருகில் பிடிப்பதும் கூடாது.

முக்காலி பிடிப்பு *(Tripod grip)*

இடது கை




வலது கை

1 – நடு விரல்

2 – பெரு விரல்

3 – ஆள்காடி விரல்

அனைத்து விரல்களும் சற்று வளைந்திருக்கும்

(மூலம்: Teach Handwriting, (2021)

படம் 3: இடது மற்றும் வலது கையால் எழுதுகோல் பிடிக்கும் முறை

## முடிவுரை

குழந்தைகளின் எழுத்துத் திறன் சிறக்க ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து முறையான பயிற்சியும் வழிகாட்டலும் சிறுவயதிலேயே தொடங்க வேண்டும். அப்போதுதான் தகுந்த வயதில் அவர்களின் கையெழுத்து அழகாவும் தெளிவாகவும் இருக்கும். குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கற்றலில் தேர்ச்சி பெற சீரான கையெழுத்து மிகவும் துணை புரியும். கையெழுத்தில் தேர்ச்சிப் பெற்ற குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். தற்கால முறையில், பெரும்பாலும் குழந்தைகள் பள்ளியில் சேர்ந்த முதல் நாளே எழுத்துத் திறன் ஆயத்த நிலையிலிருந்து தொடங்கப்படுவதில்லை. நினைத்தவுடன் குழந்தைகளால் எழுத முடியாது. அவர்களுக்கு வெகு தொடக்கத்திலேயே எழுதுகோல் கொடுத்து எழுத்துகளை எழுதச் செய்வது பின்னாளில் அவர்களின் கையெழுத்தை வெகுவாகப் பாதிக்கும். பாலர் வகுப்புகளில் எழுதுவதற்கான ஆயத்த நிலைகளை முறையாகக் கையாளுதல் மிக அவசியம். இப்போதைய பாடத்திட்டத்தையும் 50 ஆண்டுகளுக்கு முன் இருந்த பாடத்திட்டத்தையும் நோக்கும்போது தற்போதைய கல்வி முறையில் பாடப்பொருள் மிகுந்துள்ளது. ஆனால், எழுத்துத் திறன் போன்ற அடிப்படைத் திறனில் பொதுவாகப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளி வகுப்பு நிலையில் இத்திறன் வளர்ச்சி முறைகளுக்குத் தகுந்த கவனம் செலுத்தினால் இத்தகைய பின்னடைவைத் தவிர்க்கலாம்.

## REFERENCES

Abdul Rasid Jamian. (2011). Permasalahan Kemahiran Membaca Dan Menulis Bahasa Melayu Murid-Murid Sekolah Rendah di Luar Bandar. *Jurnal Pendidikan Bahasa Melayu,* 1(1), 1-12. Malaysia.

Ahmad Muaz Muhd Hairi, Nik Nur Syazwani Ibrahim & Aziyati Zahirah Asnil Aimi. (2020). Tahap Penguasaan Kemahiran Menulis Kanak-Kanak 5+ Dan 6+ Tahun. *Jurnal Kesidang*. 5(1), 99-111, Malaysia.

Annandale, R. (2019). Pre-handwriting Skills Learners Should Master at the Geginning of Grade 1. *Literacy Information and Computer Education Journal.* 10. 3258-3263. 10.20533/licej.2040.2589.2019.0428, London.

Clay, M. (2010). *How Very Young Children Explore Writing*. Heinemann. New Hampshire.

Ellen M.M., & Jennifer E.L. (2021) Occupational Therapy in The Preschool Classroom - Promoting Fine Motor and Visual Motor Skills for Kindergarten Readiness. *Journal of Occupational Therapy, Schools, & Early Intervention*. 14:2, 134-152, London.

Gerde, H.K., Bingham, G.E., & Wasik, B.A. (2012). Writing in Early Childhood Classrooms: Guidance for Best Practices. *Early Childhood Eduction Journal*. 40, 351–359, Switzerland.

Growing Hands-On Kids. (2021) retrieved from https://www.growinghandsonkids.com/basics-pre-writing-activities-skills-kids

Kementerian Kesihatan Malaysia. (2022). *Playing Promote Handwriting Readiness.* http://www.myhealth.gov.my/en/playing-promote-handwriting-readiness/

Mohd Sharif, M. H., Che Azid, M. N., & Wan Kharuddin, W. A. N. (2021). Penerapan Kaedah Tunjuk Cara Dalam Aktiviti Fizikal dan Estetika untuk Meningkatkan Kemahiran Menggunting Kanak-kanak. *Jurnal Pendidikan Awal Kanak-Kanak Kebangsaan*, 10(2), 85-102, Malaysia.

Pazlanivelu. (2006). *Centamiḻ Kaṟpikkum Muṟaikaḷ*. Ayya Nilayam. Thanjavur.

Rathinasabapathy. (2000). *Tamiḻ kaṟka, kaṟpikka*. Amsaa Publications. Chennai.

Maulik, S., Sweety, S., & Vaibhavi, V. (2022). A Study to Evaluate Pencil Grip Type, Hand Functions - Dexterity & Grip Strength in Children Using Tech for 2 or More Hours a Day. *International Journal of Health Sciences and Research*. 12. 274-284, India.

Siti Sakinah Jalil, Siti Khadijah Lokman, Asha Hasnimy Mohd Hashim, Zainal Abidin Zainuddin, & Halijah Ibrahim. (2013). Jenis Genggaman Pensel Dan Prestasi Kemahiran Melakar Dikalangan Kanak-kanak Normal Dan Bermasalah Pembelajaran: Pemerhatian Awalan Instrumen CEKAP. *2 nd International Seminar on Quality and Affordable Education (ISQAE 2013),* 416-418. Malaysia.

Suppureddiyaar. (1964). *Tamil Paitrum Murai*. Subramania Pillai Publishers, Thirunelveli.

Suraya Zaidon. (2016). *Melatih Kanak-kanak menulis*. ABS Education Sdn Bhd. Malaysia.

Teach Handwriting. (2021). retrieved from https://teachhandwriting.blog/category/paper-position/

Teach Handwriting. (2021). retrieved from https://teachhandwriting.blog/category/pencil-grip/

Teach Handwriting. (2021). retrieved from https://teachhandwriting.blog/category/sitting-position/
Thayalasaami. (1962). *Putiya tamiḻ kaṟpikkum muṟai*. Pugalenti Nilayam. Tiruchi

Yigit-Gencten, V. & Jones, S. (2021). Exploring children's writing development in response to transition from pre-school to primary context in Turkish classrooms. *SN Social Sciences A Springer Nature Journal* 1(3), 77-117, Switzerland.